தமிழ் நாடு சட்டமன்ற மேலவை.

செவ்வாய்க்கிழமை, 1984 மார்ச் 6.

மாசி 23, ருத்ரோத்காரி, திருவள்ளுவராண்டு—2015.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையில் உள்ள மேலவை மண்டபத்தில் முற்பகல் 9-30 மணி அளவில், மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் தலைவர் (டாக்டர் ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

1. வினாக்கள்-விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

Overdraft.

*51 *Q.*—Dr. T. R. JANARTHANAM (on behalf of Thiru S. J. Sadiq Pasha): Will the Hon, the Minister for Finance be pleased to state—

(*a*) the overdraft amounts drawn by the Government of Tamil Nadu from the Reserve Bank of India, Madras and the dates on which they were drawn during 1983 up to 31st October 1983;

(*b*) the reasons for such drawal of overdraft; and

(*c*) the amount of interest, if any, paid by the Government for such overdraft?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) தமிழ் நாடு அரசு, இந்திய ரிசர்வ் வங்கியிடமிருந்து பெற்ற மிகைப்பற்று, அவை எந்த நாட்களில் பெறப்பட்டன என்ற விவரங்கள் @ மேலவையில் வைக்கப்பட்டுள்ளன.

(இ) மாநிலத்தின் அன்றாட நிதித் தேவைகளைச் சமாளிக்க, தேவையென்றால் ஒரு குறிப்பிட்ட நாளில் ரிசர்வ் வங்கியிடம் மேல்பற்று வாங்கி நிலைமை சீரடையும்போது திருப்பி அளிக்கப்படுகிறது. இந்த ஆண்டில் நாம் மிகைப்பற்று வாங்கியதற்கான முக்கிய காரணம் நாம் தொடர்ந்து இரண்டு வறட்சி ஆண்டுகளின் விளைவுகளை சமாளிக்க வேண்டி இருந்ததுதான். வறட்சிப்பணிகளுக்கு இந்திய அரசு அனுமதித்தது தவிர, வடிமுனைக் குழாய்க் கிணறுகள் தோண்டுதல், கிணறுகளை ஆழப்படுத்துவதற்கான கடன்கள், உழவர்களுக்குக் கைத்தறி சேலைகளையும் வேட்டிகளையும் வழங்கியது போன்ற வறட்சித் துயர் தணிப்புப் பணிகளுக்காக இம்மாநில அரசு பெருந் தொகையைச் செலவிட வேண்டியிருந்தது. தொடர்ந்து வறட்சி நிலவிய காரணத்தினால் சிறு உழவர்களைப் பொறுத்தவரையில் நிலவரி வசூல்

@ 198-201 ஆம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.

விட்டுவிடப்பட்டது. கூட்டுறவுக் கடன் வசூலும் கணிசமாக இல்லை. இவற்றிற்கெல்லாம் மேலாக 1983-84 ஆம் ஆண்டின் முதல் பாதியில் விற்பனை வரி வசூல் 1982-83 ஆம் ஆண்டின் அதே கால அளவுக்கான வசூலுடன் ஒப்பிடுகையில் மிகவும் குறைவாகும். சென்ற ஆண்டிலும் நடப்பு ஆண்டிலும் பருவமழை பொய்த்துவிட்டதால் மின்வெட்டு கொண்டு வரப்பட்டது. இதனால் உற்பத்தி குறைந்தது ; விற்பனை வரி வசூலும் குறைந்தது. பருவ மழை பொய்த்துவிட்டதன் காரணமாக. நீர் நிலைகளில் இருந்த நீர் அளவு குறைந்து விட்டது. இதன் விளைவாக, மின்வெட்டு கொண்டுவரவேண்டிய நிலை ஏற்பட்டது. இறுதியாக மின்வாரியத்தின் கூடுதல் நிதிப் பொறுப்புகளை அரசு ஏற்க வேண்டியதாயிற்று. மேலும், பொது பங்கிட்டு முறையைச் சீராக நடத்திவருவதற்காக வெளி மாநிலங்களிலிருந்து அதிக விலையில் அரிசி வாங்குவதற்காக தமிழ் நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்குப் பெருந் தொகையை அரசு வழங்கியுள்ளது. இந்நிலையில், கிருஷ்ணா நதி நீரை சென்னை மாநகருக்குக் கொண்டுவருவதற்கான தெலுங்கு-கங்கைத் திட்டம் குறித்து எதிர்பாராத வகையில் ரூ. 30.00 கோடி கூடுதலாக ஏற்க வேண்டியதாயிற்று. 1983-84 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளைத் தயாரிக்கும்பொழுது இதை எதிர்பார்க்கவில்லை. எனவே, தமிழ்நாடு அரசு, இந்திய ரிசர்வ் வங்கியிடமிருந்து ரூ. 3,19,43.61 இலட்சம் மிகைப்பற்று வாங்க வேண்டியதாயிற்று ; ரூ. 3,13,57.02 இலட்சம் திருப்பிக் கொடுக்கப்பட்டது ; 1—11—1983 ஆம் நாளன்றுள்ளபடி இருந்த மிகைப்பற்று ரூ. 586.59 இலட்சம் ஆகும். ஆயினும், உடனடிப் பொறுப்புக்களை நிறைவேற்றவே இந்த மிகைப் பற்றுகள் வாங்கப்பட்டன ; அவற்றைத் திருப்பிச் செலுத்த அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

(உ) தமிழ் நாடு அரசு 31—10—1983 வரையில் குறைந்த அளவு இருப்புகளில் ஏற்பட்ட குறைவு குறித்தும், மிகைப்பற்று குறித்தும் இந்திய ரிசர்வ் வங்கிக்கு ரூ. 132.45 இலட்சம் வட்டி கொடுத்துள்ளது.

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, இவ்வினாவினைக் கேட்ட மாண்புமிகு உறுப்பினர் திரு. சாதிக் பாட்சா அவர்கள் அவையில் இல்லை. அவர் சார்பாக யார் இந்தக் கேள்வியை இங்கே கேட்டார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : கவன ஈர்ப்புக்குத்தான் அப்படிப்பட்ட முறை உண்டு. இதற்கு ஒருவர் வினாவை எழுப்பினாலே போதும். ஒரு உறுப்பினரின் வேண்டுகோளுக்கிணங்க அனுமதித்தேன்.

1984 மார்ச் 6]

டாக்டர் இரா. சனார்த்தனம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, மிகைப் பற்று இப்போது இருப்பதைப்போல் முன்பு வேறு எந்தக் காலத்திலாவது இருந்ததா? இதைவிட எப்போதாவது அதிகமாக இருந்ததா? இந்த மிகைப்பற்றை ஈடு செய்ய அரசு சார்பிலும், அரசு நிறுவனங்கள் சார்பிலும் நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகளிலும் மற்ற வங்கிகளிலும் நீண்டகாலக் கடனுக்காகப் போடப்பட்ட தொகையை எடுத்து ரிசர்வு வங்கிக்குச் செலுத்துமாறு ஆணையிடப்பட்டிருக்கிறதா? இந்த மிகைப்பற்று எத்தனை ஆண்டுகளில் சரி செய்யப்படும்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : சென்ற ஆண்டின் துவக்கம் வரையில் நாம் மிகைப்பற்று வாங்க வேண்டிய அவசியத்தில் இல்லை. 1980-லிருந்து 1983 வரையில் வேறுபல மாநிலங்கள் மிகைப்பற்று வாங்க வேண்டிய நிலை ஏற்பட்டபோதுகூட, நாம் மிகைப்பற்று வாங்க வேண்டிய அவசியத்தில் இல்லாத அளவிற்கு நம்முடைய நிதிநிலை சரிக்கட்டப்பட்டது. நான் ஏற்கெனவே விடையில் சொன்னவாறு, பல்வேறு எதிர்பாராத சூழ்நிலை ஏற்பட்டதன் காரணமாக, மிகைப்பற்றுக்கு ஆளாக வேண்டிய அவசியம் ஏற்பட்டது. 1983 ஆம் ஆண்டு துவக்கம் வரையில் மிகைப்பற்று வாங்காத நிலை இருந்தது. இதைப்பற்றி இந்திய ரிசர்வ் வங்கியில் கவர்னர் திரு மன்மோகன்சிங் அவர்கள் இரண்டு மூன்று தடவை ஐதராபாத்தில் பாராட்டியிருக்கிறார்கள்; தமிழகத்திற்கு அவர் வந்தபோதும் பாராட்டியிருக்கிறார். இது குறித்து இந்திய நிதியமைச்சர் திரு பிரணாப் முகர்ஜி அவர்களும் பாராட்டியிருக்கிறார்கள். ஆனால் அதற்குப் பிறகு எதிர்பாராத சூழ்நிலையில் ஏற்பட்ட செலவுகள் காரணமாக மிகைப்பற்று வாங்கவேண்டிய அவசியம் வந்தது. எப்போதாவது மிகைப்பற்று வாங்கினாலும், வருவாய் வந்தவுடனே அதைத் திருப்பிச் செலுத்தும் நிலையில் தொடர்ந்து நடவடிக்கைகளை எடுத்து வருகிறோம்.

கடைசியாக சென்ற ஒரு மாத காலத்திற்கு முன்பு 113 கோடி ரூபாய் வரை மிகைப்பற்று இருந்தது. இருக்கின்ற நிலைமைகளை நான் டில்லி சென்ற போது மத்திய நிதியமைச்சர் அவர்களுக்கு விளக்கியதற்குப் பிறகு, ஓரளவிற்கு அவர்கள் அதை ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். அது மட்டுமல்லாமல், இந்த நிதியாண்டு மார்ச் 31 ஆம் தேதிக்குள் மிகைப்பற்றின் அளவை ரூபாய் 60 கோடிக்குக் கீழே கொண்டு வந்து சேர்க்கிறேன் என்று உறுதியளித்து அதற்குரிய வகையில் அவர்களும் உதவி செய்ய வேண்டுமென்று வலியுறுத்திச் சொல்லியிருக்கிறேன். அந்த அடிப்படையிலே இப்போது நடவடிக்கைகள் நடைபெற்று வருகின்றன.

திரு. அ. நல்லசிவன் : மிகைப்பற்று அதிகம் வாங்கி மத்திய அரசிடம் கெட்ட பெயர் வாங்கக் கூடாது என்ற கவலை இந்த அரசாங்கத்திற்கு இருப்பதால்தான், குடும்ப அட்டைதாரர்களுக்கு அட்டை ஒன்றுக்கு 20 கிலோ

அரிசியைக் கொடுக்க வாக்குறுதி கொடுத்திருந்தும் அப்படி கொடுக்க முடியாமல் மூன்று கிலோ, ஐந்து கிலோ என்ற அளவிற்குக் கொடுக்கிறார்களோ என்ற சந்தேகம் எனக்கு ஏற்படுகிறது. வெளி மாநிலங்களிலிருந்து போதிய அளவிற்கு நெல்லை வாங்க நிதி வைத்துக்கொள்ளாமல், ரிசர்வ் வங்கியிடமிருந்து அதிகப் பற்று வாங்கினால் கெட்ட பெயர் வரும் என்று கருதி, அதிகப் பற்று வாங்காமல் மத்திய அரசிடம் 'நல்ல பிள்ளை' என்ற பெயர் வாங்க வேண்டும் என்று இந்த அரசு கருதுவதால்தான், வெளி மாநிலங்களிலிருந்து அரிசி, நெல் ஆகியவற்றை வாங்க முடியவில்லை என்று நான் நினைக்கிறேன். வெளி மாநிலங்களிலிருந்து வாங்க முடியாமல் இங்கே கொள்முதல் செய்ததை மாத்திரம் வைத்துக்கொண்டு கொடுப்பதால்தான், அட்டைதாரர்களுக்குப் போட வேண்டிய அளவிற்கு அரிசியைப் போட முடியாமல் இருக்கிறதா? மிகைப்பற்று பற்றி இந்த அரசுக்கு ஒரு Obsession இருக்கிறது. நம்முடைய மாநிலத்தில் அரிசி வாங்க நிதி இல்லாமல் மத்திய அரசிடம் கேட்கப் போகிறோம். மிகைப்பற்று வாங்காது இருப்பதால்தான், கிராமங்களில் உள்ள குடும்ப அட்டைதாரர்களுக்கு அரிசி கொடுக்க முடியாமல் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினருக்கு ஒன்றைத் தெரிவித்துக்கொள்கிறேன். நம்முடைய விதிமுறைப்படி கேள்வி நேரத்தில் "நல்ல பிள்ளை என்று பெயர் வாங்க" என்ற குற்றச்சாட்டுக்களையெல்லாம் சொல்லக்கூடாது. விளக்கம் பெறுவதற்காகத்தான் வினாவை எழுப்ப வேண்டும்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு உறுப்பினருடைய பெயரே நல்லசிவன் என்பது.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : "நல்ல பிள்ளை" என்று அமைச்சருக்கு அவர் பெயர் வைக்கிறார்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இந்த அரசு மத்திய அரசிடம் நல்ல பெயரை வாங்க அதிக ஆர்வம் காட்டுகிறது, அக்கறை காட்டுகிறது என்பதால், தன்னுடைய உரிமைகளையும் மற்றவைகளையும் விட்டுக் கொடுக்கும் நிலைமையில் இல்லை. நாம் மத்திய அரசிடத்திலே மிகைப்பற்று வாங்குகிறோம் என்றால், அதை மாண்புமிகு உறுப்பினர் சொன்னபடி, அரிசி வாங்குவதற்கோ அல்லது மற்றவைகளுக்கோ பயன்படுத்தத் தடையில்லை. ஆனால் மத்திய அரசு இருப்பிலிருந்து எண்பதாயிரம் டன், ஒரு இலட்சம் டன் அரிசி கொடுக்க வேண்டுமென்று கேட்கிறோம். ஆனால் அவர்கள் ஐந்தாயிரத்தில் ஆரம்பித்து பிறகு பதினைந்தாயிரம் டன், இருபத்தைந்தாயிரம் டன், நாற்பதாயிரம் டன் வரையில் கொடுத்து

வந்தார்கள். மறுபடியும் இரண்டு மாதங்களாக 37 ஆயிரம் டன் என்று தருகிறார்கள். நாம் செய்யும் கொள்முதல், அவர்கள் தந்தது, வெளி மாநிலங்களிலிருந்து வாங்குவது ஆகியவற்றை வைத்துக்கொண்டு நாம் சமாளிக்கிறோம். வெளி மாநிலங்களிலிருந்து வாங்க வேண்டுமென்றால், ரிசர்வ் வங்கியிடமிருந்து கடன் வாங்கித்தான் வாங்க வேண்டும். அப்படி ஒரு இலட்சம் டன் ஆந்திராவிலிருந்து வாங்க மத்திய அரசிடம் அனுமதி கேட்டோம். அவர்கள் அனுமதி கொடுத்தாலும், நாம் 12½ சதவீத வட்டிக்கு ரிசர்வ் வங்கியிலிருந்து கடன் வாங்கித்தான் வாங்க வேண்டும். மேலும் விவசாயிகளுக்குக் கட்டுபடியாகக் கூடிய விலை கொடுக்க வேண்டுமென்று ரிஸ்க் அலவன்சாக 35 ரூபாய் கொடுத்தோம். அதை கொடுக்கக் கூடாது என்று மத்திய அரசு சொல்லுகிறது. இருந்தாலும் இங்குள்ள நிலைமையைப் பார்த்துக் கொடுக்க வேண்டுமென்று நாம் சொல்லுகிறோம். ரிசர்வ் வங்கி சாதாரண ஆட்களுக்குக் கொடுப்பது போன்று 18 சதவீத வட்டிக்குத்தான் நமக்கும் கடன் கொடுக்கிறது. 18 சதவீத வட்டிக்குக் கடன் வாங்கியாவது நெல் வாங்க வேண்டுமென்ற முயற்சி நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. ஆனால் நல்ல பெயர் எடுக்க வேண்டுமென்று சொன்னால், எல்லோரும் சேர்ந்து எடுக்க வேண்டிய ஒன்றுதான். அவசியமானபோது மிகைப்பற்று வாங்கித்தான் ஆக வேண்டும். வட்டி செலுத்தினாலும் பரவாயில்லை. நாம் இதுவரை ஒரு கோடியே 35 இலட்சம் ரூபாய் வட்டி மட்டும் செலுத்தியிருக்கிறோம். வட்டி செலுத்தினாலும் கூட, நிலைமையைச் சமாளிக்க வேண்டுமென்பதற்காக அவர்களிடத்திலே கேட்கவேண்டிய அவசியம் ஏற்பட்டது.

கிராமக் காவலர்கள்

*52 வினா.—டாக்டர் இரா. சனார்த்தனம் (திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா சார்பில்): மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கிராம நிர்வாக அலுவலரின்கீழ் பணியாற்றும் பகுதிநேர கிராமக் காவலர்களை, முழுநேர ஊழியர்களாக மாற்றும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை?

(உ) கிராமக் காவலர்களின் ஊதியத்தை உயர்த்திக் கொடுக்கும்படி, அவர்களிடமிருந்து அரசுக்கு முறையீடு ஏதும் வந்துள்ளதா?

(எ) ஆம் எனில், அதன்மீது அரசு எடுத்த நடவடிக்கை யாது?